BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ட்டன் நகர நிர்வாகம் இன்னும் அதிக அளவில் நிலையாக வசிக்கத் தக்க அக்கம்பக்கத்தை உருவாக்குகிறது**

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 17, 2021) – இன்றைய தினம், ப்ரமீலியாவின் K, E மற்றும் F பகுதிகளுக்கான ப்ரமீலியா நிலையாக வசிக்கத்தக்க அக்கம்பக்கங்களுக்கான செயல் திட்டம் [Bramalea Sustainable Neighbourhood Action Plan (SNAP)] ஒன்றுக்கு அப்புதல் அளித்தது.

ப்ரமீலியா SNAP என்பது K, E மற்றும் F பகுதிகளுக்கான வரிசையான செயல்பாடுகளுக்கு பரிந்துரை செய்கிறது; இது, சுற்றுச்சூழல் அமைவிடங்கள் மற்றும் பசுமை உள்கட்டமைப்பு , பாதுகாப்பும் செயல்பாடும் நிறைந்த போக்குவரத்து வசதி, சமுதாய மற்றும் தனியார் தோட்டங்களுடனான ஆரோக்கியமான உள்ளூர் உணவு உற்பத்தி, வீடுகள் கட்டிடங்களின் திறன்தன்மை,வணிக மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான பசுமையாக்கும் முனைப்புகள் மற்றும் சமூக சகிப்புத்தன்மை ஆகியவை கொண்ட ஒருங்கிணைந்த கட்டமைப்பினை உருவாக்குவதை இலக்காக கொண்டிருக்கிறது.

SNAP திட்டங்கள் நகரத்தின் சமுதாய சக்தி உபயோகம் மற்றும் மாசு உமிழ்தலைக் குறைக்கும் திட்டத்தை [Community Energy and Emissions Reduction Plan (CEERP)] முன்னெடுக்கிறது. இந்த CEERP ஆனது, சக்தி உபயோகிப்பதின் திறன் தன்மையை மேம்படுத்தி, பசுமை வீடுகளின் வாயு உமிழ்வினைக் குறைத்து, பொருளாதார ஆதாயத்தை உருவாக்குகிறது; இதனால் சக்தியைப் போற்றிப் பாதுகாத்து ப்ராம்ப்ட்டன் நகரில் காலநிலை மாற்றத்திற்கு ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளின் சகிப்புத்தன்மையைக் கூட்டுகிறது.

முழு செயல்திட்ட அறிக்கை இங்கு. கிடைக்கிறது

**பின்புலம்**

நிலைத்து நிற்கவல்ல அக்கம்பக்கத்து நடவடிக்கை என்பது அக்கம் பக்கம் எனும் அளவில் கவனம் செலுத்தும்படியாக, நிலையான நகர்ப்புற புதுப்பித்தலுக்கான கூட்டமைப்பு, மற்றும் காலநிலை நடவடிக்கைகளுக்கான ஒரு புதுமை படைக்கவல்ல மாதிரியாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சுற்றுப்புறத்திற்கென தனிப்பயனாக்கப்பட்ட செயல் திட்டத்தினால் வழிநடத்தப்படவிருக்கும் இந்த திட்டமானது, நகராட்சியின் நிலைத்து நிற்கவல்ல தன்மைக்கான முன்னுரிமைகளை சமூகத் தேவைகளுடன் ஒருங்கிணைக்கிறது; ஒருங்கிணைந்த மறுபயன்பாட்டுத் தீர்வுகளை அடையாளம் காட்டுகிறது என்பதுடன், பொது அமைப்புகள், சமூக நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் குடியிருப்பாளர்களிடையே தாங்கிநிலைக்கவல்ல கூட்டாண்மைகளை வளர்க்கிறது. இதன் விளைவாக,

திட்ட நிகழ்ச்சிகளின் செயல்திறனை வழங்கவும், குடியிருப்பாளர்களுக்கு ஆற்றல் வழங்கவும், புதுமைகளை வெளிப்படுத்தவும் SNAPகள் உதவுகின்றன.

துவக்கத்தில் டோரோன்ட்டோ மற்றும் பிராந்திய போற்றிக்காக்கும் அதிகார அமைப்பினால் [Toronto and Region Conservation Authority (TRCA)] உருவாக்கப்பட்ட SNAP ஆனது ஒன்ட்டேரியோ முழுக்கவுமாக பன்னிரண்டுக்கும் மேலாகவும், ப்ராம்ப்ட்டன் –ப்ரமீலியாவில் மூன்று இடங்களிலும் கவுண்ட்டி கோர்ட் SNAP, மற்றும் ஃப்லெட்ச்சர்ஸ் க்ரீக் SNAP எனவும் பரவி இருக்கின்றன.

**லின்குகள்**

- நிலைத்து நிற்கவல்ல அக்கம்பக்கத்திற்கான செயல் திட்டங்கள் [Sustainable Neighbourhood Action Plans (SNAPs)]
- ப்ரமீலியா (Bramalea) SNAP
- கவுன்ட்டி கோர்ட் (County Court) SNAP
- ஃப்ளெட்ச்சர்ஸ் க்ரீக் (Fletcher's Creek) SNAP
- சமுதாய சக்தி உபயோகம் மற்றும் மாசு உமிழ்வுகள் குறைக்கும் திட்டம் [Community Energy and Emissions Reduction Plan (CEERP)]

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாகும்; இது காலநிலை மாற்றத்தில் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக, இன்னும் அதிக நிலையான சுற்றுப்புறங்களை உருவாக்கி, அதன் குடியிருப்புவாசிகளுக்கு பசுமையான ஒரு வாழ்க்கை முறையை ஊக்குவிக்கிறது. ப்ரமீலியா SNAP மூலமாக ப்ரமீலியாவின் K, E மற்றும் F பகுதிகளில் டோரொன்ட்டோ மற்றும் பிராந்திய போற்றிக்காக்கும் ஆணையம், பீல் பகுதி அமைப்பு மற்றும் ஆரோக்கியமான சமூகங்களுக்கான முன்முயற்சி ஆகியவற்றில் எங்கள் கூட்டாளர்களுடன் இணைந்து, நிலைத்து நிற்கவல்ல ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறோம்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"உலகளாவிய காலநிலை மாற்றத்தில் எங்கள் பங்களிப்பைக் குறைப்பதற்கும், சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் ப்ரமலியா SNAP திட்டமானது எங்கள் சமூகம் உபயோகிக்கும் சக்தி மற்றும் மாசு உமிழ்வைக் குறைக்கும் திட்டத்தை முன்னெடுத்து செல்கிறது. 2050 ஆம் ஆண்டில் ப்ராம்ப்ட்டனில் உருவாகவிருக்கும் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வை 80 சதவீதம் அளவிற்கு குறைப்பதற்கான பயணத்தில் நாங்கள் இருக்கிறோம். "

- *பால் விசெண்ட், தலைவர், பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை; பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“பிரமலியா SNAP  என்பது, 7 மற்றும் 8 ஆவது வார்டுகளுக்கான நிலைத்து இருக்கவல்ல தன்மைக்கான ஒரு மைல்கல் ஆகும். சமூகத்தின் தேவைகளை பிரதிபலிக்கும் வகையில் இந்த செயல் திட்டம் எங்கள் சமூகம் மற்றும் பங்குதாரர்களுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒவ்வொரு அடியிலும் சமூக ஈடுபாடு என்பது முன்னுரிமை கொண்ட விஷயமாகும். ”

- *சார்மெய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 7 & 8, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“1960 களில் கனடாவின் முதல் திட்டமிடப்பட்ட செயற்கைக்கோள் நகரமாக இருக்கும் ப்ரமீலியா ஆனது, ப்ராம்ப்ட்டனில் ஒரு தனித்துவமான வரலாற்றையும் அடையாளத்தையும் கொண்டுள்ளது. இந்த மேம்பாடுகள் ப்ரமீலியா குடியிருப்பாளர்களுக்கு சேவை செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன, மற்றும்  K, E மற்றும் F பகுதிகளை ஆரோக்கியமாகவும் அனைவருக்கும் நிலைத்து நிற்கவல்லதாகவும் ஆக்குகின்றன. ”

- பேட் ஃபோர்ட்டினி, *துணைத் தலைவர், பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை; பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 & 8, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நகர ஊழியர்கள் ப்ரமீலியா SNAP மூலமாக நிலையான மாற்றத்தை உருவாக்க தங்களை அர்ப்பணித்துள்ளனர். ப்ராம்ப்ட்டன் நகரின் மூன்றாவது SNAP ஐ உருவாக்குவதில் எங்கள் கூட்டாளிகள், சமூக உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு நன்றி. அதன் நடைமுறைப்படுத்தலை நாங்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடகத் தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca